258 எம் வின்சென்ட்
பெரேரா மாவத்தை
கொழும்பு 14
0114700800

**யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் ஹொரண தொழிற்சாலை முதன்முறையாக பெண் ஊழியர்களை நியமித்துள்ளது**

*பணியிடத்தில் பன்மைத்துவம் மற்றும் சேர்க்கை அரவணைப்பில் மற்றொரு சாதனை இலக்கினை எட்டியுள்ளது*

**கொழும்பு செப்டம்பர் 30, 2021:** பணியிடத்தில் பாலின சமத்துவம் தற்போது முக்கிய பங்கு வகித்து வருகின்ற நிலையில், மிக வேகமாக விற்றுத் தீருகின்ற நுகர்வோர் தயாரிப்புக்களில் நாட்டிலுள்ள மிகப் பாரிய நிறுவனங்களில் ஒன்றான யூனிலீவர் ஸ்ரீலங்கா, தனது ஹொரண உற்பத்தித் தொழிற்சாலையில் முதன்முறையாக பெண் ஊழியர்களை பணியில் அமர்த்தி, பன்மைத்துவம் மற்றும் சேர்க்கை அரவணைப்பு ஆகியவற்றை அடையப்பெறும் தனது பயணத்தில் மற்றுமொரு முக்கியமான சாதனை இலக்கினை எட்டியுள்ளது. புதிதாக இணைக்கப்பட்டுள்ள பெண் ஊழியர்கள் 23 பேரும் தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ளதுடன், அவர்களில் சிலர் பல்வேறு துறைசார் நிபுணத்துவங்களில் பட்டத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவர்கள் ஹொரண தொழிற்சாலையின் அழகு தயாரிப்புக்களின் உற்பத்தி ஆலை மற்றும் தற்போது முற்றுமுழுதாக பெண்களால் இயக்கப்படும் பேபி கொலோன் உற்பத்தி ஆலை ஆகியவற்றின் உற்பத்தித் தொழிற்பாடுகளில் இணைந்து கொள்வார்கள்.

இலங்கையில், யூனிலீவர் நிறுவனத்தின் முகாமைத்துவ சபையில் 55% பெண்களாகக் காணப்படுவதுடன், அதன் ஒட்டுமொத்த பணியாளர்களில் 31% பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. உலகளவில் நிறுவனம் 50:50 என்ற விகிதத்தில் பாலின சமநிலையை அடைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டின் முடிவில் தனது உலகளாவிய வணிகச் செயற்பாடுகளில் முகாமைத்துவ பதவிகளில் பாலின சமத்துவத்தை அடையவுள்ளதாக 2010 ஆம் ஆண்டில் அது வழங்கிய உறுதிப்பாட்டின் ஒரு அங்கமாக இது காணப்படுவதுடன், குறித்த இலக்கினை யூனிலீவர் நிறுவனம் ஒரு ஆண்டு முன்பதாகவே அடைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பன்மைத்துவம் மற்றும் சேர்க்கை அரவணைப்பு ஆகியவற்றில் யூனிலீவர் நிறுவனம் காண்பிக்கின்ற அர்ப்பணிப்பு குறித்து **யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் மனித வளத் துறை பணிப்பாளரான அனன்யா சபர்வால்** அவர்கள் கருத்து வெளியிடுகையில், *''தற்போது ஆண் ஆதிக்கம் நிலவும் உற்பத்தி மற்றும் விற்பனைத் துறைகளில் எமது முன்களப் பணிகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் முயற்சிகளை நாம் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றோம். ஹொரணவில் முதன்முறையாக பெண் ஊழியர்களை நாம் அறிமுகப்படுத்துவது யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பன்மைத்துவ வரலாற்றில் பெருமைமிக்க சாதனைகளில் ஒன்றாகும். கருத்தரிப்பு உதவி, வீட்டு வன்முறை உதவிக் கொள்கைகள் போன்ற சில கொள்கைகளை தொழிற்துறையில் நாம் முதன்முதலாக அறிமுகப்படுத்தியுள்ளோம் என்பதையும் இத்தருணத்தில் பணிவுடன் நினைவுபடுத்த விரும்புகிறோம். எங்களைப் பொறுத்தவரை, பன்முமைத்துவம் என்பது பாலின சமநிலையைப் பற்றியது மட்டுமல்ல, அனைத்து வகையான திறமைசாலிகளுக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் அரவணைக்கும் ஒரு சூழலை தோற்றுவிப்பதாகும். மக்கள் தங்களது திறமைகளை நிருபிக்க இடமளிப்பது தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் வளர்ச்சி தளைத்தோங்க உதவும் என்று நான் உண்மையாக நம்புகிறேன்,''* என்று குறிப்பிட்டார்.

இந்த சாதனை இலக்கு குறித்து **யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பணியாளர் உறவுகளுக்கான தலைமை அதிகாரியும், சிரேஷ்ட மனித வள வணிகப் பங்காளருமான நயனி பீரிஸ்** அவர்கள் கருத்து வெளியிடுகையில், *''ஹொரணவில் எமது தொழிற்சாலையில் பெண் ஊழியர்களையும் தற்போது முதன்முதலாக காணக் கிடைக்கின்றமை கடந்த பல ஆண்டுகளாக நாம் மிகவும் கவனமாக திட்டமிட்டதன் பலனாகும். இது ஒரு நீண்ட மற்றும் உற்சாகமான பயணமாக இருந்தது, ஆனால் முதல் முறையாக அதனை நிலைநாட்ட முடிந்துள்ளமை உண்மையில் பெறுமதிமிக்கது. ஆரம்பத்தில் இருந்தே ஒப்பீட்டளவில் ஆண் ஆதிக்கம் செலுத்தும் தொழிற்சாலையாக இது இருந்ததால், எங்கள் ஹொரண தொழிற்சாலையின் பணித்தளத்தில் பெண்களின் திறமைகளை அறிமுகப்படுத்த பல மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. எங்கள் முயற்சிகள் மற்றும் பணித்தளத்தில் பெண்*

*பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க நாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து நாங்கள் பெருமைப்படுகிறோம்,''* என்று குறிப்பிட்டார்.

**யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் ஹொரண தொழிற்சாலை முகாமையாளரான தமித் அபேரத்ன** அவர்கள் இது தொடர்பில் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கையில், *''பெண்களுக்கு உகந்த உள்கட்டமைப்பு மற்றும் நலன்புரி வசதிகளை வடிவமைப்பது மற்றும் கட்டமைப்பதில் இருந்து, எங்கள் தொழிற்சாலையில் பெண் ஊழியர்களை பணியில் அமர்த்தக்கூடிய துறைகளை அடையாளம் கண்டு, ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் எமது தொழிற்படையில் பன்மைத்துவம் மற்றும் சேர்க்கை அரவணைப்பின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது வரை, எங்கள் தொழிற்சாலை வளாகத்தில் அனைத்தையும் உள்ளடக்கிய சூழலை தோற்றுவிக்க நாங்கள் அதிக முதலீடுகளை மேற்கொண்டுள்ளோம். பெண்களுக்கு வலுவூட்டி, எங்கள் பணியிடத்தில் சமத்துவத்தை ஊக்குவிப்பதில் இவ்வளவு தூரம் பயணிக்க முடிந்துள்ளமையையிட்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்,''* என்று குறிப்பிட்டார்.

நிறுவனம் தனது ஹொரண தொழிற்சாலையில் முதன்முதலாக பெண் ஊழியர்களை இணைத்துக் கொள்வதற்கும், தக்கவைப்பதற்கும் ஒரு விரிவான திட்டத்தை மேற்கொண்டிருந்தது. யூனிலீவர் நிறுவனம் இந்த முயற்சியை ஆழம் பார்ப்பதற்காக, கடந்த 3 ஆண்டுகளில் மிகவும் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் கூடுதலாகக் காணப்பட்ட காலகட்டங்களில் சமயாசமய அடிப்படையில் பெண் ஊழியர்களை அறிமுகப்படுத்தியிருந்தது. 'உங்கள் குறிக்கோளைக் கண்டறியவும்' (Discover Your Purpose) என்ற செயலமர்வுகளும் இந்நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், பணியில் உள்வாங்கப்பட்டவர்கள், தமது தொழிலில் வளர்ச்சி கண்டு, பரிணமிக்கவும், வாழ்வில் தளைத்தோங்கவும் இடமளித்தன. தேசிய தொழிற்சார் தகைமைகளைக் கொண்ட பெண்களை வேலைக்கு அமர்த்துவதால், பெண்களை தொடர்ந்தும் தக்கவைத்து, எதிர்காலத்தில் இன்னும் மேம்பட்ட, சிறப்பான பணிப் பொறுப்புக்களை அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் அவர்களை வளர்ப்பதையும் நிறுவனம் இதன் மூலமாக உறுதி செய்துள்ளது.

பணியிடத்தில் மக்கள் தளைத்தோங்குவதற்கு இடமளிக்கின்ற வகையில், மக்களை மையப்படுத்திய அக்கறைகள் மற்றும் கொள்கைகளை உருவாக்குவதற்கான முயற்சிகளை யூனிலீவர் ஸ்ரீலங்கா தொடர்ந்து முன்னெடுக்கும்.